sentiments which have already been raised to a high pitch. I require a little more time to go thoroughly into the facts of the case and to give my decision whether a *prima facie* case has been made out or not, on Tuesday the 11th instant. I would have stated it Monday but tomorrow and day-after-tomorrow being Government holidays, I may not be able to get certain information which I must have before giving a decision on this matter.

(இ) சென்னை போலீஸ் கமிஷனர் தீ விபத்துக்கள் பற்றி செய்தித்தாள்களுக்கு அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றொரு அவையுரிமைக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கொண்டுவருவார்.

திரு. வி. கே. கோதண்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் என்னுடைய உரிமைப் பிரச்சினையொன்றை எழுப்பு கின்றேன். அதாவது—

"பொறுப்புள்ள போலீஸ் பெரிய அதிகாரி (இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ்) இப்போது தீ பிடித்து தொடர்ந்து நாசமாகி வருவதற்கான காரணம் சதித்திட்டம்தான் என்று அறிக்கை கொடுத்துள்ளார். மற்றொரு போலீஸ் அதிகாரி, சென்னை நகரத்திற்குப் பொறுப்பாக உள்ள போலீஸ் கமிஷனர், இதென்ன வழக்கமாக நடப்பதுதானே, சென்ற ஆண்டில் ஜூன் மாதத்தில் மட்டும் 67 சம்பவங்கள் நடந்துள்ளன. இப்போது அந்த அளவுக்கு நடந்துவிடவில்லை என்றும், இது சதித்திட்டமென்றோ, நாசவேலை என்றோ சொல்லிவிட முடியாதென்றும் அறிக்கை விட்டுள்ளதைப் பார்க்கும்போது இவருடைய செய்தி, சதித்திட்டக்காரர்களுக்கு மேலும் ஊக்கத்தைக் கொடுப்பதாகத் தெரியவருகிறது.

ஆகவே, இந்தப் பேரவையில் கூறிவருவதற்கு நேர் விரோத மாக போலீஸ் கமிஷனர் அறிக்கை விட்டிருப்பது இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அவர்களின் அறிக்கைக்கு முரணாக இருப்பது மட்டுமல்லாமல், இந்தப் பேரவையை அவமதிப்பதாகவும் உள்ளதென்பதால், போலீஸ் கமிஷனர் மீது உரிமைப் பிரச்சினையை நான் எழுப்புகிறேன். இத்துடன் அறிக்கை வெளியான செய்தித் தாள்களையும் இணைத்துள்ளேன்."

இதுபற்றிய விவரம் ஆங்கிலப் பத்திரிகையிலும் வந்திருக்கிறது. தமிழ்ப் பத்திரிகையிலும் வந்திருக்கிறது.

'தின மணி' பத்திரிகையில் 6—7—1967 அன்றைய இதழில் வெளியாகியிருப்பதைப் பார்த்தால், இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் அவர்கள், 'இது சதித்திட்டம்தான்' என்பதை எடுத்து விளக்கியிருக்கிறார் :

"சென்னை நகரில் தொடர்ந்து தீ விபத்துகள் ஏற்பட்டு வருவதற்கு சதி வேலையே காரணம் என்று தோன்றுகிறது எனவும்,

[திரு. வி. கே. கோதண்டராமன்] [1967 ஜூலை 7

போலீஸார் புலன் விசாரணை செய்து வருவதாகவும், போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஸ்ரீ எப். வி. அருள் தீ விபத்து குறித்து கேட்டதற்குப் பதிலளிக்கையில் கூறினர்."

என்று அந்தப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது.

அதே 'தினமணி' பத்திரிகையில், அதை தேதியில், போலீஸ் கமிஷனர் பேட்டியளித்ததைக் குறித்த செய்தியும் வந்திருக்கிறது.

"சாதாரணமாக ஜூன், ஜூலை மாதங்களில் தீ விபத்துக்கள் அதிகமாக இருப்பது வழக்கம். ஜூன் மாதத்தில் 47 தீ விபத்துக்கள் ஏற்பட்டன. சென்ற ஆண்டு ஜூன் மாதம் 67 விபத்துக்கள் ஏற்பட்டன. சென்ற ஆண்டு ஜூலையில் 30 விபத்துக்கள் ஏற்பட்டன. இவ்வாண்டு ஜூலையில் இதுவரையில் 16 விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன."

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பத்திரிகையில் '16' என்று இருக்கிறது. ஆங்கிலப் பத்திரிகையில் '20' என்று இருக்கிறது. நேற்று மாத்திரம் பத்து விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அப்பொழுது முப்பது சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இன்றைய பத்திரிகையைப் பார்த்தால், இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்ன சொல்லியிருக்கிறார்? இதுவரையில் தொடர்ந்து இதுபோன்று முப்பது சம்பவங்கள் ஏற்பட்டதே கிடையாது. ஆகவே, இது சதித் திட்டத்தின் அடிப்படையில்தான் நடந்திருக்கிறதே தவிர, மற்றப்படி இது ஏதோ எதிர்பாராத விதத்தில் ஏற்பட்டதாகக் கூறிவிட முடியாது என்று சொல்லியிருக்கிறார். ஆகவேதான், இந்த உரிமைப் பிரச்சினையை நான் கிளப்புகின்றேன். இதை உரிமைக் குழுவிற்கு விடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

Mr. SPEAKER: The hon. Member Mr. V. K. Kothandaraman gave me copies of the issues in which the alleged statement by Mr. Singaravelu, Commissioner of Police, has appeared. There is absolutely no doubt that it is at variance with the statement made by the Inspector-General of Police. This alleged statement has been made at a time when there is high tension prevailing in the City and when the matter is under discussion in the Assembly. It is supposed that the Commissioner made the statement at a press conference. I would like to know from the Government whether this particular Police officer has been authorised to hold press conferences. I would say that dealing with the Press is an intricate matter which should be dealt with by persons who know what Press freedom means and who know the rules and rights of the Assembly. Even if this officer is endowed with power to hold press conferences, is he authorised to state merely facts or is he allowed to travel beyond facts and give his own opinions which are at variance with the opinion of the Inspector General of Police? I would get these matters clarified by the Government and I will give a ruling on this matter on Tuesday, the 11th July, 1967.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல் அட்டவணையில் கண்டுள்ள அலுவலுக்கு இப்பொழுது வருவோம்.